# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கல்விப்பீடம்
## பட்டமாணிக் கற்கைநெறி பகுதி III
## பருவம் I - 2015
## SC 408 பாடசாலை ஆலோசனை

நேரம் 3 மணித்தியாலங்கள்

---

### பகுதி I

**சகல வினாக்களுக்கும் விடை தருக.**

(1) வழிகாட்டல் என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

(2) பாசனின் மாதிரிகைக்கிணங்க தனியாள் பகுப்பு என்றால் என்ன?

(3) பாரம்பரிய சிகிச்சையளிக்கும் நுட்பமுறைகளில் பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைகள் நான்கினைப் பெயரிடுக.

(4) பரீட்சை காரணமாக எழுகின்ற பரீட்சை மனவழுத்தம் (exam stress) கொண்ட மாணவனிடம் காணப்படும் நான்கு இயல்புகளைப் பட்டியற்படுத்துக.

(5) பீதி (phobia) என்பதால் கருதப்படுவது யாது? உதாரணத்தின் உதவியுடன் விளக்குக.

(6) இவ்விரண்டு உதாரண வினாக்களை முன்வைப்பதனூடாக ஆலோசனை அமர்வொன்றில் கேட்கப்படுகின்ற வினாக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

(7) சமூகமான நுட்பமுறையில் பயன்படுத்தப்படுகின்ற சமூகத்தாயம் (socio gram) என்பதால் கருதப்படுவது யாது?

(8) ஆலோசனையின் போதான பின்தொடர் அமர்வுகளின் முக்கியத்துவங்கள் இரண்டினை முன்வைக்குக.

(9) அல்பேட் எலிஸின் நியாயித்தல் எழுச்சிக் பரிகாரக் கொள்கையில் குறிப்பிட்டவாறாக A முதல் F வரையிலான எழுத்துக்களினால் குறிக்கும் அம்சங்களை பெயரிடுக.

(10) பாடசாலையொன்றில் ஆலோசனை நிலையத்தினை தாபிக்கும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் நான்கினை எழுதுக. **(2 x 10 = 20 புள்ளிகள்)**

### பகுதி II

**விரும்பிய நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

1. (i) ஆலோசனை என்பதால் கருதப்படுவது யாது என்பதை விளக்குக. **(6 புள்ளிகள்)**

   (ii) இலங்கையின் ஆலோசனை வரலாற்றில் முக்கியத்தும் பெறும் நிகழ்வுகள் ஆறினைக் குறிப்பிடுக. **(6 புள்ளிகள்)**

   (iii) தற்காலப் பாடசாலைகளில் ஆலோசனைச் சேவையின் அவசியத்தினை எடுத்துக் காட்டுவதற்கான நியாயங்களை முன்வைக்குக. **(8 புள்ளிகள்)**

2. (i) ஆலோசனையின் நான்கு பிரதான துறைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றைப் பற்றியும் சிறுகுறிப்பு வரைக. (8 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஆலோசகர் ஒருவர் ஆலோசனை தொழிற்துறைக்கு பொருத்தமான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினைக் கொண்டிருத்தல் அவசியமாகும்". இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (12 புள்ளிகள்)

3. (i) ஆலோசனையின் ஒழுக்கக் கோவையில் குறிப்பிட்டவாறாக நான்கு ஒழுக்க நடத்தைகளை முன்வைத்து அவற்றுள் இரண்டினைப் பற்றி உதாரணத்தின் உதவியுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

(ii) பாடசாலை அமைப்பின் தொடர்ச்சியான நிலவுகைக்கு பாடசாலை ஆலோசகர் ஒருவர் ஒழுக்கக் கோவையில் உள்ளவாறான நடத்தைகளைப் பின்பற்றி நடத்தலின் அவசியப்பாட்டினை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

4. (i) மாணவர்களின் நடத்தைகளை அவதானித்து பதிவு செய்யும் கருவிகள் என்ற வகையில் சம்பவப்பதிவேடு மற்றும் எண்சார் தரமிடு அளவுகோல் ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதத்தினைப் பற்றி உதாரணங்களின் மூலமாக சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஆலோசனை அமர்வொன்றில் ஆலோசகருக்கும் ஆலோசனைநாடிக்கும் இடையில் தொடர்பினைக் கட்டியெழுப்புதவற்கு பயன்படுத்தப்படும் கவனித்தல் திறன்களின் முக்கியத்துவத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) ஆலோசனை தொடர்பான கொள்கைகள் பற்றிய அறிவானது ஒரு ஆலோசகருக்கு முக்கியத்துவம் பெறுமாற்றை எடுத்துக் காட்டுக. (8 புள்ளிகள்)

(ii) உளப்பகுப்பு அணுகுமுறையின் அல்லது நிகழ்வியல் மற்றும் தோற்றப்பாட்டு அணுகுமுறையின் கோட்பாட்டு அடிப்படைகள் ஒரு பாடசாலை ஆலோசகருக்கு பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்வதில் பயன்படுமாற்றை சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

6. (i) மொறில், ஒட்டிங் மற்றும் ஹேஸ்ட் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையின் முப்பரிமான மாதிரிகையில் குறிக்கப்பட்டவாறாக ஆலோசனையின் நோக்கங்களை விளக்குக. (8 புள்ளிகள்)

(ii) ஆன் ரோ அல்லது எலி கின்ஸ்பேர்க்கினால் முன்வைக்கப்பட்ட தொழில் வழிகாட்டல் கொள்கையின் கோட்பாட்டறிவானது ஒரு பாடசாலை ஆலோசகருக்கு தொழில் வழிகாட்டலின்போது எவ்வாறு பயன்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)